DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 129/2019 DW : 1

Name : ஏ.வி.கிருஷ்ணமூர்த்தி Age – 54

S/o : வெங்கடேசலு Village – தாளூர்

Taluk : திருத்தணி

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 11.03.2026

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் வாதிக்கு அடமான பத்திரம் எழுதிக்கொடுத்து சம்மந்தமாக என் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துளளார். வா.சா.ஆ.1 ஆவணம் ரூ.2 லட்சம் ரூபாய்க்கு சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். 13.10.2014 அன்று கொடுக்கப்பட்ட தொகை தான் ரூ.2 லட்சம் என்றால் சரிதான் அதை நான் திரும்பி செலுத்திவிட்டு 17.09.2018 அன்று ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 ஆவணம் மேற்சொன்ன தொகை கொடுத்து ரத்து செய்வே நான் சார் பதிவாளர் அலுவத்தில் சென்றேன். நான் என்னுடைய பதிலுரையில் வாங்கி கடனை ஒப்புக்கொண்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மையானவை தான். வா.சா.ஆ.1 சம்மந்தமாக நான் நீதிமன்றத்திற்கு வந்து பின்பு தான் தெரிய வந்தது. நான் வாதி மீது எதிரிடை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தற்போது வா.சா.ஆ.1 உள்ள கையெழுத்த என்னுடையது தான். வாதி மா தோப்பை குத்தகைக்கு எடுத்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. என் நிலத்தை வாதி 5 வருடத்திற்கு 85,000/- ரூபாய்க்கு குத்தகை எடுத்தார் என்றால் சரிதான். அதனால் நன் எங்களுக்கு தகராறு ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை என் அண்ணன் தான் சொல்லியுள்ளார். நான் வாதி என்னிடம் பணத்தை திரும்ப கேட்கும் போது

நானும், என் அண்ணனும் சேர்ந்து அவரை அடித்துவிட்டோம் என்றோம் அதனால் நான் வாதி மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாதி தான் என் மீது புகார் கொடுத்தார். நான் வாதி மீது புகார் கொடுத்தால் தான் அவர் மீதுமுதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு அவர் முன் ஜாமின் எடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

2) திருத்தணி நீதிமன்றத்தில் 74/2019 மற்றும் 79/2019 என்ற வழக்கு என் மீது யார் தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியின் மைதுனர் என் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. 77/2019 என்ற வழக்கு வாதியின் மனைவி என் மீது தாக்கல் செய்த வழக்கு என்றால் சரியல்ல. மேற்சொனன விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு தற்போது நீதின்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மா தோப்பு குத்தகை எடுத்து மற்றும் அவரின் வருமானம் வைத்து எனக்கு பணம் கொடுத்தார் என்றும் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 14:58:49 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.